# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24312841.*


**வழக்கு எண்.15082/விசாரணை/2009**

<u>விசாரணை நடைபெற்ற நாள் 24.09.2009.</u>

| | |
|---|---|
| முன்னிலை: | முனைவர் (திருமதி) சாரதா நம்பி ஆரூரன், எம்.ஏ.,எம்.ஃபில்,,பி.எச்,டி., மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர்: | திரு C.வெங்கடசுப்பு, 15–B, அய்யனார் கோயில் தெரு, அனுப்பானடி, மதுரை – 625 009. |
| பொது அதிகார அமைப்பு: | பொதுத் தகவல் அலுவலர், உள் (Cts.I) துறை, தலைமைச் செயலகம், சென்னை – 600 009. |

*****

மனுதாரர் திரு C.வெங்கடசுப்பு சார்பாக வழக்கறிஞர், திரு P.பழனி மற்றும் பொதுத் தகவல் அலுவலர் திரு N.மணி, அரசு சார்புச் செயலாளர், உள் துறை, தலைமைச் செயலகம், சென்னை இன்று (24.09.2009) இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு வந்திருந்தனர்.

மனுதாரர் 10.04.2009 அன்று பொதுத் தகவல் அலுவலர், உள் துறை, தலைமைச் செயலகம், சென்னை அவர்களிடம் பணி நீக்கம் செய்யப்பட்ட குறிப்பிட்ட ஒருவரைப் பற்றி சில தகவல்களைக் கேட்டு மனுச் செய்துள்ளார். 24.04.2009 அன்று விதி எண்.8(1)(j)–ஐ மேற்கோள் காட்டி தகவல் தர மறுக்கப்பட்டுள்ளது. 26.05.2009 அன்று மனுதாரர் துறைக்கு மேல் முறையீடும், 04.07.2009 அன்று ஆணையத்திற்கு மேல் முறையீடும் செய்ததன் அடிப்படையில் வழக்கு இன்று (24.09.2009) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையில் திருத்துறைப்பூண்டியில் மாவட்ட முன்சீப் ஆகப் பணியாற்றிய திரு R.சங்கரப்பன் புரிந்த குற்றங்களுக்காக அவர் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் நடந்து, அவர் பணி நீக்கமும் செய்யப்பட்டுள்ளது தெரிய வந்தது. பொது நலன் கருதி அவரைப் பற்றிய சில விவரங்களைத் தகவல்களாகக் கேட்டுள்ளதாக மனுதாரர் சார்பாக வந்திருந்த வழக்கறிஞர் கூறினார். வழக்குகள் முடிந்து, உரிய நடவடிக்கை எடுத்து பணி நீக்கம் செய்யப்பட்ட நிலையில், தகவல்களைத் தர மறுத்தல் சரியல்ல என்று ஆணையம் கருதுகிறது. பொதுத் தகவல் அலுவலரிடம் விசாரித்த போது இவ்வழக்கு குறித்த கோப்புகள் உயர் நீதிமன்றத்திற்கு அளிக்கப்பட்டுள்ளதாகக் கூறினார். இந்நிலையில் கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

பொதுத் தகவல் அலுவலரிடம் உள்ள தகவல்களையும், விடுபட்ட தகவல்களை உயர் நீதிமன்றத்தில் கேட்டுப் பெற்று, இவ்வாணை பெற்ற மூன்று வாரங்களுக்குள் மனுதாரருக்கு அளித்து, ஒப்புகை பெற்று விவரத்தை ஆணையத்திற்குத் தெரிவிக்கும்படி பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்படுகிறது.

**ஒப்புதல் பெறப்பட்ட நாள் 25.09.2009** **தமிழ்நாடு தகவல் ஆணையம்**
**ஆணையத்தின் ஆணைப்படி**

**(சு.மோகன தாஸ்)**
**உதவி பதிவாளர்**

பெறுநர்

**<u>வழக்கு எண்.15082/விசாரணை/2009</u>**

பொதுத் தகவல் அலுவலர்,
உள் (Cts.I) துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.

திரு C.வெங்கடசுப்பு,
15–B, அய்யனார் கோயில் தெரு,
அனுப்பானடி, மதுரை – 625 009.

*"ptl"*